செ.வெ.எண்: 04/2022 நாள்: 02.11.2022

# திருப்பூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் (OSC) காலியாக உள்ள மைய நிர்வாகி, மூத்த ஆலோசகர், தகவல் தொழில்நுட்பபணியாளர், களப்பணியாளர் மற்றும் பாதுகாவலர்/ ஓட்டுநர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் பணிபுரிய திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!

தமிழ்நாடு அரசு, திருப்பூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் **ஒருங்கிணைந்த சேவை மையத்தில் (OSC)** காலியாக உள்ள மைய நிர்வாகி, மூத்த ஆலோசகர், தகவல் தொழில்நுட்பபணியாளர், களப்பணியாளர் மற்றும் பாதுகாவலர்/ ஓட்டுநர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் பணிபுரிய திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பபடிவத்தினை https://tiruppur.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட சமூக நலஅலுவலர், அறை எண்.35,36 தரை தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் என்ற முகவரிக்கு வரும் 10.11.2022 **மாலை 5.30** பி.ப மணிக்குள் தபால் மூலமாகவோ அல்லுத dswo.tpr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பபட வேண்டும் எனவும், தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். எஸ்.வினீத் இ.ஆ.ப.,அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

**காலிப்பணியிட விவரம்**

| வ. எண் | பதவியின் பெயர் / தொகுப்பூதியம் | வயது வரம்பு | பணியிட எண்ணிக்கை | கல்வி தகுதி | இதர தகுதிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | மைய நிர்வாகி<br><br>(மாதம் ரூ.30,000/- தொகுப்பூதியம்) | 45 வயதுக்குள் இருத்தல் நன்று | 1 (ஒன்று) | Master of Social Work (MSW)/ Bachelor’s Degree in law | 1.திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் பெண் விண்ணப்பதாரராக இருத்தல் வேண்டும்<br><br>2. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளிலிருந்து மீட்பு மற்றும் ஆலோசனை வழங்குதல் தொடர்பான பணியில் குறைந்தது ஐந்து வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.<br><br>3.ஒருங்கிணைந்த சேவை மையத்தில் (OSC)24x7 தங்கி பணிபுரிய விருப்பமுள்ளவராக இருத்தல் வேண்டும்.<br><br>4.181 மற்றும் இதர உதவி எண்கள் மூலம் வரும் அழைப்பு தொடர்பான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | உதவிகளுக்கு தேவை அறிந்து உதவும் எண்ணம் கொண்டவராகவும், களப்பணிபுரிய விருப்பமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.<br><br>5.பெண்களுக்கு விழிப்புணர்வு மற்றும் ஊக்கப்படுத்தும் வகையில் அரசு திட்டங்களை சென்றடைய செய்ய ஆர்வம் உடையவராக இருத்தல் வேண்டும். |
| 2 | மூத்த ஆலோசகர்<br><br>(மாதம் ரூ.20,000/- தொகுப்பூதியம்) | 45 வயதுக்குள் இருத்தல் நன்று | 1 (ஒன்று) | Master of Social Work (MSW)/ Master Degree in Clinical Psychology | 1.திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் பெண் விண்ணப்பதாரராக இருத்தல் வேண்டும்<br><br>2.பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளிலிருந்து மீட்பு மற்றும் ஆலோசனை வழங்குதல் தொடர்பான பணியில் குறைந்தது மூன்று வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.<br><br>3. சுழற்சி முறையில் (24x7) பணிபுரிய ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br><br>4.181 மற்றும் இதர உதவி எண்கள் மூலம் வரும் அழைப்பு தொடர்பான உதவிகளுக்கு தேவை அறிந்து உதவும் எண்ணம் கொண்டவராகவும், களப்பணி புரிய விருப்பமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.<br><br>5.பெண்களுக்கு விழிப்புணர்வு மற்றும் ஊக்கப்படுத்தும் வகையில் அரசு திட்டங்களை சென்றடைய செய்ய ஆர்வம் உடையவராக இருத்தல் வேண்டும். |
| 3 | தகவல் தொழில்நுட்பபணி யாளர்<br><br>(மாதம் ரூ.18,000/- தொகுப்பூதியம்) | 40 வயதுக்குள் இருத்தல் நன்று | 1 (ஒன்று) | Graduate with Diploma in Computer / IT | 1.திருப்பூர் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்<br><br>2.தகவல் தொழில்நுட்பதுறையில் (Data Management, Web based reporting and Video Conferencing) குறைந்தது 3 வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | களப்பணியாளர்<br><br>(மாதம் ரூ.15,000/- தொகுப்பூதியம்) | 40 வயதுக்குள் இருத்தல் நன்று | 1 (ஒன்று) | MSW | 1.திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் பெண் விண்ணப்பதாராக இருத்தல் வேண்டும்<br><br>2. மூன்று வருடம் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.<br><br>3.சுழற்சி முறையில் (24x7) பணிபுரிய ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br><br>4.181 மற்றும் இதர உதவி எண்கள் மூலம் வரும் அழைப்பு தொடர்பான உதவிகளுக்கு தேவை அறிந்து உதவும் எண்ணம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.<br><br>5.பெண்களுக்கு விழிப்புணர்வு மற்றும ஊக்கப்படுத்தும் வகையில் அரசு திட்டங்களை சென்றடைய செய்ய ஆர்வம் உடையவராக இருத்தல் வேண்டும். |
| 5 | பாதுகாவலர்/ ஓட்டுநர் Security Guard<br><br>(மாதம் ரூ.15,000/- தொகுப்பூதியம்) | இல்லை | 2 (இரண்டு) | 10th Pass/ Fail | 1.திருப்பூர் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்<br><br>2. மூன்று வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.<br><br>3. சுழற்சி முறையில் (24x7) பணிபுரிய ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br><br>4.181 மற்றும் இதர உதவி எண்கள் மூலம் வரும் அழைப்பு தொடர்பான உதவிகளுக்கு தேவை அறிந்து உதவும் எண்ணம் கொண்டவராக இருத்தல் வேண்டும். |

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**